

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று (19.12.2024) ஈரோடு விருந்தினர் இல்லத்தில், மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் வளர்ச்சி திட்டப் பணிகள், முதலமைச்சர் அவர்களின் அறிவிப்புகள், சட்டப்பேரவை மானியக் கோரிக்கையின்போது அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள் ஆகியவற்றின் தற்போதைய நிலை ஆகியவை குறித்து ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தின்போது, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர் சு. முத்துசாமி, நாடாளுமன்ற உறுப்பினர் அந்தியூர் செல்வராஜ், ஈரோடு மாவட்ட ஆட்சித் தலைவர் ராஜ கோபால் சுன்கரா, ஈரோடு மாநகராட்சி ஆணையர் மரு. மனிஷ், மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



இனமான பேராசிரியர் பெருந்தகை அவர்களின் 103–வது பிறந்தநாளை யொட்டி ஆலந்தூர் சட்டமன்ற அலுவலகத்தில் அவரது திருவுருவப் படத்திற்கு காஞ்சி வடக்கு மாவட்ட செயலாளர் அமைச்சர் – தா.மோ.அன்பரசன் மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செய்து பொதுமக்களுக்கு இனிப்புகளை வழங்கினார். உடன் சட்டமன்ற உறுப்பினர்கள் இ.கருணாநிதி, எஸ்.ஆர்.ராஜா, பகுதி செயலாளர்கள் என். சந்திரன், பி.குணாளன், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் கோல்டு டி.பிரகாஷ், வட்டச் செயலாளர்கள் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

# ஈரோட்டில் முதல்வர் மு.க.ஸ்டாலின் விசைத்தறிக் கூடத்தைப் பார்வையிட்டார்!

## குறைகளைக் கேட்டறிந்தார்!



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (19.12.2024) ஈரோடு மாவட்டம், பிச்சாண்டம்பாளையம் ஊராட்சி மன்ற அலுவலகம் அருகில் இயங்கி வரும் விசைத்தறி கூடங்களுக்கு நேரில் சென்று பார்வையிட்டு, அதன் செயல்பாடுகள் குறித்தும், நெசவாளர்களின் தேவைகள் குறித்தும் கேட்டறிந்தார். இந்நிகழ்வின்போது, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர் சு. முத்துசாமி, நாடாளுமன்ற உறுப்பினர் அந்தியூர் செல்வராஜ், ஈரோடு மாவட்ட ஆட்சித் தலைவர் ராஜ கோபால் சுன்கரா மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

ஈரோடு, டிச. 20-

ஈரோட்டில் செயல்பட்டு வரும் விசைத்தறி கூடத்தை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேரில் சென்று பார்வையிட்டு, அதன் செயல்பாடுகள் குறித்து கேட்டறிந்தார்.

தமிழ்நாட்டில் விசைத்தறி தொழிலில் ஈடுபட்டுள்ள விசைத்தறி நெசவாளர்கள் மற்றும் தொழிலாளர்களின் வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்திட, விசைத்தறி நெசவாளர்களுக்கு விலையில்லா மற்றும் மானியத்துடன் கூடிய மின்சாரம் வழங்கும் திட்டத்தின் கீழ், 750 அலகுகள் வரை வழங்கப்பட்டு வந்த விலையில்லா மின்சாரம் 3.03.2023 முதல் 1000 அலகுகளாக உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது, மின்னணு விசைப் பலகைகள் உற்பத்தியின் போது நூல்கள் அறுந்து விழுவதை தடுக்கவும், சாதாரண விசைத்தறிகளில் சீராகவும் மற்றும் நிலையான தரத்துடனும் துணிகள் உற்பத்தி செய்யப்படுவதை உறுதிப்படுத்தவும் 50 விழுக்காடு அரசு மானியத்துடன் 5000 விசைத்தறியில் மின்னணு விசைப் பலகைகள் நிறுவப்படும் என்று அறிவிக்கப்பட்டு, 6 கோடி ரூபாய் அரசால் ஒப்பளிப்பு செய்யப்பட்டு, விசைத்தறி செறிவு மிக்க பகுதிகளில் 5000 விசைத்தறிகளில் மின்னணு விசைப் பலகைகள் பொருத்தப்பட்டது போன்ற பல்வேறு திட்டங்களை அரசு செயல்படுத்தி வருகிறது.

விசைத்தறி தொழில் மேம்பாட்டிற்காகவும், இப்பணியில் ஈடுபட்டு வரும் நெசாவாளர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்திடவும், விசைத்தறி கூடத்திற்கு நேரில் சென்று அவர்களின் தேவைகள் குறித்து கேட்டறிந்திடும் பொருட்டு, தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (19.12.2024) ஈரோடு மாவட்டம், பிச்சாண்டம்பாளையம் ஊராட்சி மன்ற அலுவலகம் அருகில் இயங்கி வரும் இரண்டு விசைத்தறி கூடங்களுக்கு நேரில் சென்று பார்வையிட்டு, அதன் செயல்பாடுகள் குறித்தும், நெசவாளர்களின் தேவைகள் குறித்தும் கேட்டறிந்தார். இந்த விசைத்தறி கூடங்களில் 24 விசைத்தறிகள் மூலம் உற்பத்தி மேற்கொள்ளப்பட்டு வருவதுடன், 5 தொழிலாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர்.

இந்நிகழ்வின்போது, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர் சு.முத்துசாமி, நாடாளுமன்ற உறுப்பினர் அந்தியூர் செல்வராஜ், ஈரோடு மாவட்ட ஆட்சித் தலைவர் ராஜ கோபால் சுன்கரா, மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

### புழல் எம்.நாராயணன் ஏற்பாட்டில், வி.ஆர்.குப்பன், பி.எஸ்.சந்துரு வரவேற்பில்

# மாதவரம் வடக்கு பகுதி தி.மு.க. சார்பில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாள் விழா - மாபெரும் பொதுக்கூட்டம்!

## மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ. தலைமையில் ஆலந்தூர் ஆர்.எஸ்.பாரதி, ம.மோகநிதி சிறப்புரையாற்றுகின்றனர்!

சென்னை, டிச. 20-

சென்னை வடகிழக்கு மாவட்டம் மாதவரம் வடக்கு பகுதி திமுக சார்பில் புழல் காவாங்கரை பிள்ளையார் கோவில் தெருவில் 21.12.2024 சனிக்கிழமை மாலை 6 மணிக்கு, மாபெரும் பொதுக்கூட்டம் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா, மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் ஏற்பாட்டில் நடைபெறுகிறது.

23 அ வட்டச் செயலாளர் வி.ஆர்.குப்பன், 23வது வட்டச் செயலாளர் பி.எஸ்.சந்துரு ஆகியோர் வரவேற்புரை ஆற்றுகிறார்கள்.

பகுதி கழக நிர்வாகிகள் வி.திராவிட வீரன், கா.சிவசங்கரன், ஆ.ராஜேந்திரன், எஸ். கௌரி, ஆர்.முரளி, பி. தரணி,கே.காசிநாதன், பி.நிர்மல் குமார், கே.செல்வன், நா.மோகன் குமார் நாகூரார், வி. கார்த்திகேயன், பா.சந்திரன், கே.ராஜா,

வட்டச் செயலாளர்கள் கே. அங்குசாமி, இ.கண்ணப்பன், கே.கருணாகரன், மாத்தூர் கா.தாமரைச்செல்வன், நந்தினி சண்முகம், 23 அ வட்ட நிர்வாகிகள் மு.உசேன் மொய்தீன், பி.சுதாகர், அம்மு மூர்த்தி, பொ.அறிவழகன், பெ.முத்துகிருஷ்ணன்,அ.அப்துல் சமது, வி.ஹரி, து.பார்பன், ஜி.பார்த்திபன், 23வது வட்ட நிர்வாகிகள் மு.விக்னேஸ்வரன், டி.ராஜாராம், மேக்சிலா உதயகுமார், சொ. சரவணன், டி.நெல்சன் ராஜ், க.சிவகுமார், க.ந.க.சைமன் ,வே.ரவி, எஸ்.முத்துவேல், மாவட்ட அணிகளின் துணை அமைப்பாளர்கள் எச்.பீர்முகமது, பி.குணசேகரன், எம். அமுதா, எஸ்.கலைச்செல்வி, ஆர்.சுதா, எஸ்.சுதா, ஜெ.யுவராணி, ஆகியோர் முன்னிலை வகிக்கிறார்கள்.

சென்னை வடகிழக்கு மாவட்ட செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் தலைமையில் நடைபெறும் இக்கூட்டத்தில், கழக அமைப்புச் செயலாளர் ஆலந்தூர் ஆர். எஸ்.பாரதி அவர்கள் கலந்து கொண்டு சிறப்புரையாற்றுகிறார்.மேலும் தலைமை கழக சொற்பொழிவாளர் ம.மோகநதி, மருத்துவர் கலாநிதி வீராசாமி எம் பி, கே.பி.சங்கர் எம் எல்ஏ, தொகுதி பார்வையாளர் டாக்டர் ஜெஅருண், மிசா ப.மதிவாணன், வி.இராமநாதன், வி.கண்ணதாசன், வீ.கவி கணேசன், ஜி.சந்திர போஸ், ஆர்.பத்மநாபன், குறிஞ்சி எஸ் கணேசன், மு. ராஜேந்திரன், டி.ராமகிருஷ்ணன், பா.அறிவழகி, எம்.ஆனந்தன், தி.மு.தனியரசு, ஜி.துக்காராம், ஏ.வி.ஆறுமுகம், எஸ்.நந்த கோபால், வை.ம.அருள்தாசன், மீ.வே.கருணாகரன்,ஜி. தயாளன், சி.அற்புதராஜ், ஜி. ராஜேந்திரன், ஜெ.ஜெய் மதன், இரா.முருகேசன், என். பரந்தாமன், டி.ஏ.ராஜு, பி.சாந்தி, இளைஞரணி அமைப்பாளர் ஆர்.டி.மதன் குமார்,வி.தியாகராஜன், சன் முனியாண்டி,எம்.எம்.செந்தில், எஸ்.ஏ.சீனிவாசன், கு. தமிழ்மணி, ரா.சுந்தர்ராஜ், ஜே.அபுல் ஹாசன், டாக்டர் து.கோபால், ஜே.தேவனேசன், எம்.கோமளவள்ளி, ஆர். டி ,குமார், பி.வெங்கடேசன், கே. ரவிக்குமார், நா.மோகன சுந்தரம், ரா.உதயராஜ், கே. லட்சுமி காந்தன், மதிவாணன், சி.ஏழுமலை, சி. கோவிந்தராஜ், கே.தேசிங்கு, டி. சீனிவாசன், மு.சதீஷ்குமார், டி.ஜி.ஆர்.மணிவண்ணன், கேபிள் த.கணேசன், ஜி.கே.இனியன், மஞ்சம்பாக்கம் ஆர்.பாபு, பி.ஜெயராஜ், டி.வினோத், ஜி.ராஜ்குமார், எஸ்.உதயகுமார்,கே.சண்முகப்ரியன், எஸ்.கோபாலகிருஷ்ணன், எஸ்.சிவக்குமார், பா.கோபிநாத்,வீ.மணிகண்டன், துரை தசரதன், சா.முகமது வசீம், கே.ஏழுமலை, எஸ்.கருணாகரன், க.சரவணன், டி.ஜெய்சங்கர் ,என்.சந்திரன், டி.வெங்கடேசன், பேன்சி ரமேஷ், கா.சேரலாதன், எஸ்.பார்த்தசாரதி, ஜெ.யுவராணி, எஸ்.ஆர்.சேகராஜன், சி.ஹரிஷ், சுப்பிரமணி, எம்.என்.அஜய் தென்னவன், ஏ.விஜயன், யுவராஜ், த.விக்னேஸ்வரன், விஜய் ஆனந்த், நைனியப்பன், வக்கீல் சுரேந்தர், வக்கீல் எம். என்.தளபதி, மணலி புதுநகர் சிஎம் ராஜா, டோமினிக் பிரான்சிஸ் தேவராஜ், செமின் எடிசன், எலந்தனூர் சிவப்பிரகாஷ், குளக்கரை மஞ்சுநாதன், கடப்பாக்கம் மகேஷ் குமார், சாம்ராஜ்.உள்ளிட்ட பலர் கலந்து கொள்கிறார்கள்.

இந்த நிகழ்ச்சியில் 1047 பேருக்கு மாதவரம் வடக்கு பகுதி கழகத்தின் சார்பில் சேலைகள் வழங்கப்படுகிறது. நிகழ்ச்சிக்கு 23 அ வட்ட அவைத் தலைவர் ஏ.ராமச்சந்திரன், 23வது வட்டவை தலைவர் து.எழில் குமார் நன்றி உரையாற்றுகிறார்கள்

நிகழ்ச்சிக்கான ஏற்பாட்டை மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் செய்து வருகிறார்.



தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (19.12.2024) திருப்பூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற விழாவில் 300 பயனாளிகளுக்கு ரூ.9.45 கோடி மதிப்பீட்டில் அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன், மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் திருமதி. என். கயல்விழி செல்வராஜ், நாடாளுமன்ற உறுப்பினர்கள் கே.சுப்பராயன், கே.இ.பிரகாஷ், திருப்பூர் தெற்கு சட்டமன்ற உறுப்பினர் க.செல்வராஜ், மாவட்ட ஆட்சித்தலைவர் தா.கிறிஸ்துராஜ், மாநகராட்சி மேயர் ந.தினேஷ்குமார், துணை மேயர் ரா.பாலசுப்பிரமணியம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

### திராவிட கருத்தியல் ஆசிரியர் சங்கம் சார்பில்

# "காலனியமும் தமிழ் மறுமலர்ச்சியும்" கருத்தரங்கம்!

## கருத்தியல் ஆசிரியர் சங்க மாநில ஒருங்கிணைப்பாளர் முனைவர் தேன்மொழி பொன் முத்துராமலிங்கம் வாழ்த்துரை!

மதுரை, டிச.20-

திராவிடக் கருத்தியல் ஆசிரியர் சங்கமும், மதுரை ஆய்வு வட்டமும் இணைந்து நடத்திய காலனியமும் தமிழ் மறுமலர்ச்சியும் எனும் கருத்தரங்கம் மதுரை காமராசர் பல்கலைக்கழகக் கல்லூரியில் நடைபெற்றது.

இந்நிகழ்விற்கு மதுரை காமராசர் பல்கலைக்கழகக் கல்லூரி முதல்வர் முனைவர்.ம. புவனேஸ்வரன் தலைமை தாங்கினார். மதுரை காமராசர் பல்கலைக்கழக பேராசிரியர் முனைவர் பிரவீன் குமார் வரவேற்புரை வழங்கினார். திராவிடக் கருத்தியல் ஆசிரியர் சங்கத்தின் மாநில ஒருங்கிணைப்பாளர் முனைவர் தேன்மொழி முத்துராம லிங்கம் தமது வாழ்த்துரையில், "இந்திய வரலாற்றில் நிகழ்ந்த கருத்துமுதல் வாதத்திற்கு எதிரான பொருள்முதல்வாதப் போராட்டத்தின் தொடர்ச்சிதான் திராவிடம்" என்பதனைப் பதிவு செய்தார்.



திராவிடக் கருத்தியல் ஆசிரியர் சங்கமும், மதுரை ஆய்வு வட்டமும் இணைந்து நடத்திய காலனியமும் தமிழ் மறுமலர்ச்சியும் எனும் கருத்தரங்கம் மதுரை காமராசர் பல்கலைக்கழகக் கல்லூரியில் நடைபெற்றது. இதில் மதுரை காமராசர் பல்கலைக்கழகக் கல்லூரி முதல்வர் முனைவர். ம.புவனேஸ்வரன் தலைமை தாங்கினார். மதுரை காமராசர் பல்கலைக்கழக பேராசிரியர் முனைவர் பிரவீன் குமார் வரவேற்புரை வழங்கினார். திராவிடக் கருத்தியல் ஆசிரியர் சங்கத்தின் மாநில ஒருங்கிணைப்பாளர் முனைவர் தேன்மொழி முத்துராமலிங்கம் தமது வாழ்த்துரை வழங்கினார்.

திராவிடம் - தமிழ் என்கிற தலைப்பில் சிறப்புரை ஆற்றிய பேராசிரியர் வீ . அரசு, "திராவிடமும் தமிழும் வெவ்வேறல்ல. திராவிடத்தையும் தமிழையும் வேறுபடுத்தி பேசுபவர்களின் நோக்கம் அற்பத்தனமாக இருக்கிறது. மார்க்சியர்களாலும் தமிழ்த் தேசியவாதிகளாலும் கூட திராவிடத்தின் இயக்கவியலைப் புரிந்து கொள்ள முடியவில்லை. தமிழும் திராவிடமும் ஒரு மொழியைக் குறித்த இருவேறு சொற்கள். 19-ஆம் நூற்றாண்டில் நடைபெற்ற பகுத்தறிவுச் செயல்பாடுகள் முந்தைய ஆயிரம் ஆண்டுகள் கற்பிதங்களை தலைகீழாக்கியது. 20 நூற்றாண்டில் சனாதானத்திற்கு எதிரான போராட்டத்தை பெரியாரும் அம்பேத்கரும் முன்நின்று நிகழ்த்தினார்கள். ஒரு சொல்லை வைத்து விளையாடக்கூடிய விளையாட்டுகள் நமக்குத் தேவையில்லை" என்று உரையாற்றினார்.

முனைவர் க.சி. பழனிக்குமார், "அத்திப்பாக்கம் வெங்கடாசலனாரும் அயோத்திதாசாரும் ஒடுக்கப்பட்ட விளிம்பு நிலை மக்களின் பிரதிநிதிகளாக, காலணியத்திடம் உரிமை போராட்டத்தை மேற்கொண்டனர் அவர்கள் உண்மையான பொருளில் தமிழின் மறுமலர்ச்சிக்கு முன்னோடிகளாகத் திகழ்ந்தனர்" என்றார்.

தோழர் குமரன் விதேசிகளுக்கு எதிரான சுதேசிகள் காலனியவாதிகளிடம் நிகழ்த்திய உரையாடல் குறித்து வெளிவந்துள்ள ந. கோவிந்தராசனின் காலனிய ஆய்வுகள் குறித்து உரையாற்றினார்.

இக் கருத்தரங்கில் 200-க்கும் மேற்பட்டவர்கள் பங்கேற்றனர்.